JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **198/2014** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 5** | Prosecution /Defence / Court | |
| Name | **Manokaran** | Village | Kunnathur Road Seenapuram |
| Father's Name | **Nalachakkaravarthy** | Taluk | Perundurai |
| | | Age | |

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 07.10.2025.**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது ஆகும். 15.10.2014 ம் தேதி காலை 9.00 மணி சுமாருக்கு வேலைக்கு செல்வதற்காக என்னுடைய வீட்டிற்கு முன்பாக நின்று கொண்டிருந்த போது பெருந்துறை காவல் நிலையத்திலிருந்து உதவி ஆய்வாளர் அவர்கள் விபத்து நடந்த விவரத்தை எடுத்துக் கூறி பார்வை மகஜரி தயார் செய்ததில் நான் பார்வை மகஜரில் முதலாவதாக சாட்சி கையொப்பத்தை செய்தேன். அதில் நான் மட்டும் தான் கையெழுத்து செய்தேன். வேலைக்கு செல்ல நேரம் ஆகி விட்டதால் நான் பார்வை மகஜரில் கையொப்பம் செய்து விட்டு சென்று விட்டேன். **பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னை பெருந்துறை காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) லாரியும், ஆம்னியும் இருந்த இடம் கிழமேல் ரோடு என்றால் சரிதான். ரோட்டின் நடுவே வெள்ளைக்கோடு இருந்தது என்றால் சரிதான். லாரியும், ஆம்னி வேனும் ஒன்றுக்கொன்று மோதி ரோட்டில் உள்ள வெள்ளைக்கோட்டிற்கு அருகில் இருந்தது என்றால் சரிதான். போலீசார் இரண்டு வாகனங்களையும் புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். விபத்தில் ஈடுபட்ட வாகனங்களின் உடைந்த பாகங்கள் ரோட்டின் நடுவில் கிடந்தது என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்த அ.சா.ஆ. 1 பார்வை மகஜரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் அந்த இடத்தை விட்டு செல்லும் வரை வேறு யாரும் அ.சா. ஆ. 1 ல் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான்.

2. விபத்து 6.30 மணிக்கு நடந்து 7.00 மணிக்குள் போலீசார் சம்பவ இடம் வந்து விட்டார்கள் என்றால் சரிதான். கையெழுத்து செய்த பின்னிட்டு போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்த ஆவணத்தை தயார் செய்தது ஆண் போலீசா , பெண் போலீசா என்றால் தற்போது சரியாக ஞாபகம் இல்லை.

**மறுவிசாரணை**

**இல்லை.**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,

பெருந்துறை